**கவனிக்க.-** 2006.09.15 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1464 - 2006 සැප්තැම්බර් 22 වැනි සිකුරාදා - 2006.09.22

1464 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 872 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 873 |

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, செத்தெம்பர் 29 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, செத்தெம்பர் 15 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டு பிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன்அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

## இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கொஸ்தாபல், பெண் பொலிஸ் கொஸ்தாபல், பொலிஸ் கொஸ்தாபல் சாரதி ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி நீடிப்புச் செய்தல்

மேற்போந்த பதவிகள் தொடர்பாக 2006.06.30 ஆந் திகதிய 1452 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் தொடர்பான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2006.09.30 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

9- 713

---

## சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு

உதவி உயிரியல் வைத்திய பொறியியலாளர் (மின்சாரம்) பதவி

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சில் உயிரியல் வைத்திய பொறியியலாளர் (மிக்சாரம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இங்குள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பங்கள் இருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பங்கள் 25.10.2006 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக "செயலாளர், சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு, "சுவசிரிபாய", இலக்கம் 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "சுகாதார அமைச்சின் உதவி உயிரியல் வைத்திய பொறியியலாளர் (மின்சாரம்) பதவி" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

1. **கல்வித் தகைமைகள்**.- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மின்னியல்/மின்சார/இயந்திரப் பொறியியல் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**- உத்தியோகத்தர் ஏற்புடைய தொழிற்துறையின் பட்டத்திற்கு மேலதிகமாக வேறு ஏதேனும் தொழில் தகைமையைப் பெற்றிருப்பின் அவருக்குரிய சம்பளப் படிமுறையை ஏற்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. **வயது எல்லை**.- 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு வயது எல்லை ஏற்புடையனவாகமாட்டாது.

3. **வருடாந்த சம்பள அளவுத்திட்டம்**.- ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 (SL-1-2006) (அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் பிரகாரம்)

4. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**.- (i) இந்நியமனம் நிரந்தரமானது. பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின் கீழ் ஓய்வூதியத்திற்கு உரித்து உண்டு.

**குறிப்பு**.- 2003.01.01 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூதிய உரித்துடைய பதவி ஒன்றை வகிப்பவர் இப்பதவிக்கு தெரிவு செயயப்பட்டால், அவருக்கு தொடர்ந்தும் ஓய்வூதிய பிரமாணங்களுக்கு அமைய ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை உண்டு என்பதுடன் விதவைகள்/ தபுதாரர்கள்/ அனாதைகள் ஓய்வூதியத்திற்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 முதல் 12 வரை உள்ள விதிகள் ஏற்புடையனவாகும்.

5. **தெரிவு செய்யப்படும் முறை**.- பிரசித்த அறிவித்தல் வெளியிடப்படுவதன் மூலம், எழுத்துப் போட்டிப்பரீட்சை திறமை ஒழுங்கின்படி தெரிவுகள் இடம்பெறும்.

6. தற்பொழுது அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்கள் குறித்த திணைக்களத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இவ்வறிவித்தலின் பிரகாரம் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ரஞ்சித் மல்லிகஸ்பே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும்
போஷணை அமைச்சு.

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச
தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2006.09.08

மாதிரி விண்ணப்பப்படிவம்

### சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு

உதவி உயிரியல் வைத்திய பொறியியலாளர் (மின்சாரம்) பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடனான கடைசிப் பெயர் :------.

(ஆ) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :------.

2. முகவரி :-

(அ) பிரத்தியேக :------.

ஆ) அலுவலக :------.

(அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர் அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் அதை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

3. (அ) பிறந்த திகதி :------.

(ஆ) விண்ணப்பிக்கும் கடைசித்திகதியன்று வயது :-

வருடங்கள் :------ மாதங்கள் :------ நாட்கள் :------.

4. பால் :------.

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா :------.

6. கல்வித் தகைமைகள் :------.

7. தொழிற் தகைமைகள் :------.

8. சேவை விபரம் :-

| பதவி | நிறுவனம் | நியமனத் திகதி | நிரந்தரம்/ தற்காலிகம் |
|---|---|---|---|
| | | | |

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன். இவற்றில் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும், நியமனத்திற்கு பின்பு கண்டுபிடிக்கப்படின் நட்டஈடு எதுவுமின்றி பதவி நிக்கம் செய்யப்படுவதற்கும் கடப்பாடுடையவனாவேன்.

------
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :------

9. **திணைக்களத் தலைவரது சிபாரிசு :**

------
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

பதவிப் பெயர் :------

திகதி :------

9-733

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு

மருத்துவத் துறைக்கான மேலதிக சேவைகளை வழங்கும் தொழில்கள் (PSM) தொடர்பான தொழிற்பயிற்சி பாடநெறிக்கான மாணவர்களை இணைத்துக்கொள்ளல் - 2006

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சில் மருத்துவத்துறைக்கான மேலதிக சேவைகளை வழங்கும் தொழில்கள் தொடர்பான தொழிற்பயிற்சி பாடநெறிக்கான மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரிகள் அவர்களது தகைமைகளுக்கேற்ப பாட நெறிகளை தேர்வு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். அத்துடன் 2003 ஆம், 2004 ஆம் ஆண்டுகளின் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் பெற்ற Z புள்ளிகளின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

2. மாவட்ட சனத்தொகை விகிதாசார பரம்பலின் அடிப்படையில் பாட நெறிக்கான மாணவர்களின் எண்ணிக்கை தெரிவு செய்யப்படும்.

3. இது ஒரு முழுநேர பாட நெறியாகும். வார நாட்களில் 5 நாட்களும் வார இறுதி நாட்களில் சனிக்கிழமைகளில் மதியம் வரையும் நடைபெறவுள்ளதால் வேறு பாட நெறிகளை பயில்வோர் இப்பாட நெறிக்காக விண்ணப்பித்தல் கூடாது.

4. பாட நெறிகளுக்கான பயிற்சிக் கால வரையறைகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது :-

| குறியீட்டு இல. | பாட நெறி | பயிற்சிக் கால வரையறை |
|---|---|---|
| 1 | மருந்து வழங்குநர்கள் (Pharmacists) | 2 வருடங்கள் (ஒரு வருட செய்முறை பயிற்சி) |
| 2. | மருத்துவ ஆய்வுகூட தொழினுட்பவியலாளர்கள் (Medical Laboratory Technologistகள்) | 2 வருடங்கள் |
| 3. | பௌதிகவியலாளர்கள் (Physiotherapists) | 2 வருடங்கள் |
| 4. | எக்ஸ்ரே ஒளிப்பதிவாளர்கள் (Radiographers) | 2 வருடங்கள் |
| 5. | தொழில்சார் குணப்படுத்துநர்கள் (Occupational Therapists) | 2 வருடங்கள் |

5. **கல்வித் தகைமைகள்.-** விண்ணப்பதாரிகள் 2003 ஆம், 2004 ஆம் ஆண்டுகளில் க. பொ. த (உ. த.) விஞ்ஞான பிரிவில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் தெரிவு செய்யும் பாட நெறிக்கான பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பயிற்சி நெறிகளுக்கு தேவையான தகைமைகள் பின்வருமாறு-

| குறியீட்டு இல. | பாட நெறி | க. பொ. த. (உ. த.) தகைமைகள் | க. பொ. த. (சா. த.) தகைமைகள் |
|---|---|---|---|
| 1<br>2 | மருந்து வழங்குநர்<br>மருத்துவ ஆய்வுகூட தொழினுட்பவியலாளர் | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் திறமைச் சித்தியுடன் பின்வரும் இரண்டில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் இணைந்த கணிதம், பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் சிங்களம்/ தமிழ் மொழி கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் |
| 3<br>4<br><br>5 | பௌதிகவியலாளர்<br>எக்ஸ்ரே ஒளிப்பதிவாளர்<br><br>தொழில்சார் குணப்படுத்துநர் | க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியலில் திறமை சித்தியுடன் பின்வரும் ஏதாவது இரு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் இணைந்த கணிதம், இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் சிங்களம்/ தமிழ் மொழி கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் |

6. **ஏனைய தகைமைகள் :**

(அ) 2006.10.15 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நாட்டில் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

(இ) பௌதிக ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் மூன்று வருடங்களாவது வசித்துவருபவராக இருத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை.-** (அ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை பூர்த்திசெய்து அதில் 50 ரூபா பெறுமதியுடைய முத்திரை ஒட்டி அதன்மேல் கையொப்பமிட்டு முத்திரையை ரத்துசெய்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/கல்விச்சேவை/அரச கணக்காய்வாளர் சேவை/அரச பாடசாலை அதிபர்கள்/சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் 1,24,080 ரூபாவிற்கு குறையாத அரசாங்க அதிகாரி ஆகிய யாராவது ஒருவரிடம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(இ) முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் "பணிப்பாளர் (நிர்வாகம்)-02, சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு, "சுவசிறிபாய", இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 2006.10.15 ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அனுப்புவதுடன் கடித உறையின் இடது மேல் மூலையில் "சுகாதார அமைச்சில் நிலவும் வெற்றிடத்திற்கு புதிதாய் பயிலுநர்களை சேர்த்துக்கொள்ளல்" எனக்குறிப்பிடல் வேண்டும்.

8. அரசாங்க அல்லது அரச சார்பான நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை தமது திணைக்கள உயரதிகாரியினூடாக அனுப்ப வேண்டும்.

9. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படமாட்டாது.

10. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. மேற்குறிப்பிட்ட தகைமைகளுடன் விண்ணப்பித்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் நேர்முகப் பரீட்சை ரத்துச் செய்யப்படும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்விச் சான்றிதழ் மூலப்பிரதிகள்,மூலப்பரதிகள் இல்லாத விடத்து வெளிவாரி பரீட்சார்த்திகளுக்கு பெறுபேற்று படிவங்கள் அமர்வு பாடசாலை அதிபர்களினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் ;

(இ) பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட க. பொ. த. (உ/த) பரீட்சை புள்ளிகள் குறிப்பிடப்ட்டிருக்கும் சான்றிதழ் ;

(ஈ) தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திரம் ;

(உ) 2003, 2004, 2005 ஆம் ஆண்டுகளின் உறுதிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்களின் பிரதிகள். விண்ணப்பதாரியின் பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லாதவிடத்தில் அவரது பெற்றோரின் பெயர்கள் இடம்பெற்றிருத்தல் வேண்டும். இத்தகையோர் வாக்காளர் பட்டியலுக்கு மேலதிகமாக கிராம உத்தியாகத்தரினால் வழங்கப்படும் பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.

13. **பயிற்சித் திட்டம்.**- (i) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நெறிகளுக்காக பயிற்சி பாடசாலைகளுக்கு மேற்படி 4 ஆம் பந்தியில் உள்ளவாறு அனுமதிக்கப்படுவார்கள். பாட நெறிகள் ஆங்கில மொழிமூலமே போதிக்கப்படும்.

(ii) பயிற்சி பாடசாலைகளின் சட்ட திட்டங்களையும் ஒழுங்குகளையும் கடைப்பிடிக்க வேண்டியதுடன் சுகாதார திணைக்களத்தினால் காலப்போக்கில் மேற்கொள்ளப்படும் சட்டத்திட்ட திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது அவசியமாகும்.

(iii) இப்பயிலுநர்களுக்கான பயிற்சிகளின் போது நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடையாது அல்லது நடத்தை மற்றும் செயற்பாடுகள் திருப்தியற்ற அல்லது பரீட்சை விதிமுறைகளை பின்பற்றாது மற்.றும் பயிற்சி காலப்பகுதியில் உரிய வகையில் சமூகமளிக்காது இருப்பின் எவ்வித முன்னறிவித்தலோ அல்லது நட்டஈடோ இன்றி எந்நேரத்திலும் இடைநிறுத்தப்படலாம்.

(iv) பயிற்சியின் போது கொடுப்பனவு வழங்கப்படும்.

(v) பயிலுநர்கள் பயிற்சி பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும்போது சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்துடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். அதாவது பயிலுநர் பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதுடன் சுகாதார திணைக்கள சேவையில் நியமனம் வழங்கப்படின் 10 வருடங்கள் சேவையாற்ற முடியும் பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லது தொடர முடியாவிடின் மேற்குறிப்பிட்ட (iii) இல் உள்ளவாறு பயிலுநர் திணைக்களத்தினூடாக அரசாங்கம் அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகளையும் மேற்கொண்ட செலவுகளையும் மீள்செலுத்த வேண்டும். இல்லாவிடின், அவற்றை மீளப் பெறுவதற்கான உரிய நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொள்ளும்.

14. **சேவைக்கு அமர்த்தல் விதிகள்.**- பயிற்சி நெறி முடிவில் நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு திணைக்களம் கட்டுப்படவில்லை. எவ்வாறாயினும் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெறும் பயிலுநர்களுக்கு குறித்த துறைகளுக்கான தரம் III க்கான நியமனங்கள் அவர்களது பெறுபேறுகளின் அடிப்படையில் நாட்டின் எப்பகுதியிலாயினும் வெற்றிடங்களைப் பொறுத்து இந்நியமனங்கள் வழங்கப்படும். முதலாவது நியமனம் கிடைக்கப்பெறும் இடத்தில் அவர்கள் 2 வருடங்கள் கட்டாய சேவையாற்ற வேண்டும்.

15. விண்ணப்பங்களை நிரப்பும்ோபது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாக நிரப்பவும். பயிற்சிகளின்போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்படின், பயிற்சியிலிருந்து இடைநிறுத்தவோ அல்லது விலக்குவதற்கோ மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக்கப்படவோ முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் பெயரை சேர்க்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

16. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் இலங்கையில் எப்பகுதியிலாயினும் சேவையினை மேற்கொள்ள தமது உடல் தகுதியை நிரூபிப்தற்கான மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். இப்பரிசோதனையில் தகுதியற்றவர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.

17. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் விதிகள் மற்றும் சுகாதார சேவைத் திணைக்களத்தின் கொள்கை மாற்றங்களுக்கேற்பவும், நிதி மற்றும் ஏனைய அரச சட்டதிட்ட மாற்றங்களுக்கும் கீழ்ப்படிவாக செயற்பட வேண்டும்.

18. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பயிற்சி நெறிக்காக சேர்த்துக்கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

ரஞ்சித் மல்லிகஸ்பே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு.

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2006.09.01

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு**

*மருத்துவத்துறைக்கான மேலதிக சேவைகளை வழங்கும் தொழில்கள் (PSM) தொடர்பான தொழிற்பயிற்சி பாடநெறிக்காக மாணவர்களை இணைத்துக்கொள்ளல் - 2006*

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

2. தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

3. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

(ii) மாவட்டம் :

(iii) மாவட்டத்தில் நிரந்தர வதிவுடையவரா? ஆம்/ இல்லை :

(iv) ஆம் எனில் எவ்வளவு காலம் :

4. பிறந்த திகதி :-
ஆண்டு :------ மாதம் :------ திகதி :------

வயது 2006.10.15 ஆந் திகதியில் -
வருடங்கள் :------ மாதங்கள் :------ நாட்கள் :------

5. பால் : (பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

6. நீங்கள் இலங்கைப் பிரஜையா? (பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

7. தேசிய ஆளடையாள அட்டை இல :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

8. விவாக நிலை :------

9. கல்வித் தகைமை :-
(அ) கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) பரீட்சை - (விஞ்ஞான பிரிவு மட்டும்) (தயவுசெய்து புள்ளி விபரங்களை இணைக்கவும்)

பரீட்சைக்குத் தோற்றிய மாவட்டம் :------
ஆண்டு :------ சுட்டெண் :------ Z புள்ளி :------

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சை :-
முதலாம் அமர்வு
ஆண்டு :------ சுட்டெண் :------

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 7 | | |
| 2 | | | 8 | | |
| 3 | | | 9 | | |
| 4 | | | 10 | | |
| 5 | | | 11 | | |
| 6 | | | 12 | | |

இரண்டாம் அமர்வு
ஆண்டு :------ சுட்டெண் :------

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 7 | | |
| 2 | | | 8 | | |
| 3 | | | 9 | | |
| 4 | | | 10 | | |
| 5 | | | 11 | | |
| 6 | | | 12 | | |

10. ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்ற தண்டணை அனுபவித்துள்ளீரா?
(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

ஆம் எனில் தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :------

11. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) எனது அறிவிற்கு அமைய என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துவதுடன் தற்போது முழுநேரப் பாடநெறிகள் எதிலும் ஈடுபடவில்லை எனவும் இத்தால் உறுதியுரைக் கின்றேன்.

(ஆ) என்னால் இத்துடன் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானவை அல்லது போலியானவை எனக் கண்டால் நான் தேர்வுக்கு முன்னராயின் தகுதியற்றவனாதற்கும், நியமனம் பெற்ற பின்னராயின் நட்டஈடு எதுவுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

முத்திரை

------
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :------

12. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி.......................................................................எனக்கு தனிப்பட்ட முறையில் பரிச்சயமானவர் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் 2006, .................................ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

------
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
அலுவலக முத்திரையுடன்.

உறுதிப்படுத்துபவரின் விபரம் :-
முழுப் பெயர் :------
தொழில் :------
முகவரி :------
திகதி :------

9-720

---

**கல்வி அமைச்சு**

பொதுநலவாய அமைப்புப் பட்டப் பின் படிப்புப் புலமைப் பரிசில்கள், ஐக்கிய இராச்சியம் - 2007

பொதுநலவாய அமைப்புப் புலமைப் பரிசில்கள் திட்டத்தின்கீழ் ஐக்கிய இராச்சியத்தினால் வழங்கப்படும் பட்டப்பின் படிப்புப் புலமைப் பரிசில்கள் அளிக்கப்படுவதற்காக தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்புலமைப் பரிசில்கள் 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் ஐக்கிய இராச்சிய உயர் கல்வி நிறுவனங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

2. **கற்கைத் துறைகள்**.- இப்புலமைப் பரிசில்கள் தொடர்பான கற்கைத்துறைகள் வரையறுக்கப்படவில்லை. எனினும் நாட்டின் அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு மிகவும் பொருத்தமான துறைகளைக் குறித்து கூடிய கவனம் எடுக்கப்படும்.

3. **காலம்** .- (அ) கலாநிதிப்பட்டம் அல்லது அதற்குச் சமமான துறைகள் : 3 வருடங்கள். எனினும் இக்காலப்பகுதி பூரணமாக ஒரே தடவையில் வழங்கப்படமாட்டாது. தேசிய பல்கலைக்கழகம் ஒன்றில் கலாநிதிப்பட்டம் ஒன்றிற்குப் பதிவு செய்து கொண்டுள்ள ஒருவருக்கு 1 வருடத்திற்கான ஆராய்ச்சிக் காலத்துடன் கூடிய தொடர்ச்சியல்லாத வதிவிட வேலைத்திட்டத்தின் (Split-site) கீழ் கல்வியைத் தொடர வாய்ப்புண்டு.

(ஆ) பட்டப்பின்படிப்பு அல்லது அதற்குச் சமமான பட்டம் : 1 வருடம்.

(இ) மருத்துவ அல்லது பல்வைத்திய சிகிச்சைப் பயிற்சி : 6 மாதங்கள்

4. **புலமைப்பரிசிலை முடிவுறுத்தல்**.- துர்நடத்தை ஒழுங்கற்ற வரவு, உரிய அதிகாரியின் அனுமதியின்றி வகுப்புகளுக்கோ, விடுதிக்கோ வராதிருத்தல், படிப்பில் முன்னேற்றம் காணப்படாமை அல்லது

பரீட்சைகளில் சித்தி அடையாத காரணங்களினால் புலமைப்பரிசில் பெற்றவரின் புலமைப்பரிசில் எந்த வேளையிலும் முடிவுறுத்தப்படலாம்.
எந்தவொரு புலமைப்பரிசிலும் முடிவுறுத்தப்படுமிடத்து மாணவர் தமது சொந்தச் செலவில் தாயகம் திரும்புமாறு கோரப்படுவார்.

5. **அளிப்பு நியதிகள்**.- புலமைப்பரிசிலுக்குப் பின்வரும் அனுகூலங்கள் உள்ளடக்கப்படும் :-

(அ) புலமைப்பரிசில் வழங்கப்படும் நாட்டிற்குச் செல்வதற்கும் படிப்பு முடிந்து நேரடியாகவும் மிகக் குறைந்த சிக்கனமான முறையில் மீண்டும் இலங்கை திரும்புவதற்குமான அங்கீகரிக்கப்பட்ட மாணவர் சலுகைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய விமானக் கட்டணங்கள்
புலமைப்பரிசில் வழங்கப்படுவதற்கு முன்னர் செய்த பயணங்களின் செலவுகள் எதவும் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) சொந்தப் பராமரிப்புப்படி

(இ) அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை மற்றும் படிப்புக் கட்டணங்கள்

(ஈ) ஏற்புடையுமிடத்து புத்தகங்கள் கருவிகளுக்கான பண அளிப்பு

(உ) புலமைப்பரிசில் வழங்கப்பட்ட நாட்டிற்குள் அங்கீகரிக்கப்பட்ட கல்விச் சுற்றுலாவிற்கான கொடுப்பனவு.

6. **பொதுத் தகுதித் தேவைகள்.**- சகல விண்ணப்பதாரியும் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) 2007.10.01 ஆந் திகதியன்று 40 வயதிற்கு மேற்படாதவராய் இருத்தல் வேண்டும் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் சம்பந்தப்பட்ட துறைகளில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சிறப்புப்பட்டம் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் பட்டப் பின்படிப்புப் பட்டத்துடன் இரண்டாம் வகுப்பு பட்டத்தினைப் பெற்றிருக்க வேண்டும் ;

வைத்திய பட்டதாரி ஒருவர் இதற்கு மேலதிகமாக குறிப்பிட்ட பாடத்தில் அதிவிசேட சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.
(குறிப்பு (i) )

(ஈ) அரசாங்கத் திணைக்களத்தில் பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் தொழில் புரிவராக இருத்தல் வேண்டும்.- (குறிப்பு (ii) உம் குறிப்பு (iii) உம்)

(உ) ஆங்கில மொழியில் சிறந்த அறிவுடையவராக இருப்பதோடு அதனை உறுதிப்படுத்துவதற்கு IELTS மற்றும் TOFEL போன்ற பரீட்சைகளுக்குத் தோற்றி அதில் உயர் புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும். (IELTS பரீட்சையில் 6.5 இற்குக் குறையாத புள்ளிகளையும் TOFEL பரீட்சையில் 550-600 இற்குக் குறையாத புள்ளிகளும் தேவைப்படும்)

**குறிப்பு :**

(i) பட்டப்பின் படிப்புத் தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மேலே 6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதிலுள்ள தேவைகளைப் திருப்தி செய்திருக்க வேண்டும்.

(ii) தற்காலிக, அமைய அல்லது ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் வகிப்பவர்கள் அல்லது தொழிலற்றிருப்போரின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

(iii) குறிப்பிட்ட பட்டபின்படிப்புத் தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சேவையில் நிரந்தரமாக்கப்படும் அடிப்படையில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் இப்புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும். இது தொடர்பான குறிப்பு விண்ணப்பப்படிவத்தின் 16 ஆம் கூண்டில் குறிப்பிட வேண்டும்.

7. **விசேட தகைமைகள் தொடர்பான தகுதிகள்.**- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் -

(1) வியாபார நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் அல்லது அதற்குச் சமமான ஏனைய கற்கைத் துறைகளுக்கு (GMAT) பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(2) பொருளியல் அல்லது அதற்குச் சமமான துறைகளிலுள்ளோர் (GRE) பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(3) மருத்துவ மற்றும் பல்வைத்திய துறைகளுக்கு மருத்துவ சபை மற்றும் பல் மருத்துவ சபைகளில் பதிவு செய்திருக்க வேண்டும்.

(4) நேர்முகப் பரீட்சையில் சித்தியடைவோர் பிரித்தானிய மன்றத்தினால் நடாத்தப்படும் (IELTS) பரீட்சைக்குத் தோற்றி ஆகக் குறைந்தது 6.5 இற்குக் குறையாத புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(5) கலை, இசைத்துறைகளைச் சார்ந்தோர் தமது துறை சார்ந்த படைப்புகளை slides, cassettes என்பவற்றைத் தமது விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

8. **விண்ணப்பங்கள்**- (அ) ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பொதுநலவாய அமைப்புப் பட்டப்பின்படிப்பு புலமைப்பரிசில்கள், ஐக்கிய இராச்சியம் - 2007" என்ற வாசகம் தெளிவான எழுத்தில் பொறிக்கப்படல் வேண்டும்.

(இ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பப்படிவம் மட்டும் அதுவும் ஒரு கற்கை நெறிக்கு மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் மீளளிக்கப்படாத கட்டணமாக 10 இற்கான முத்திரை ஒட்டப்படுதல் வேண்டும். 10 ரூபாவிற்கான முத்திரை அல்லது முத்திரைகள் விண்ணப்பப்படிவத்தில் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கூட்டில் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரி அதன் மேல் கையொப்பமிட்டு முத்திரையை அல்லது முத்திரைகளை செல்லுபடியற்றதாக்க வேண்டும்.

(உ) பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றில் கடமைபுரியும் ஊழியர்கள் தமது விண்ணப்பத்தை தாம் கடமை புரியும் திணைக்களத் தலைவரினூடாக அனுப்பாதவிடத்து அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். எனவே அவர்கள் தமது விண்ணப்பப்படிவத்தில் 16 ஆம் கூண்டின் சான்றிதழை உரிய முறையில் நிரப்பி அனுப்ப வேண்டும்.

(ஊ) இலங்கை அரசிற்கு அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றிற்கு குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப் பணியாற்றுவதற்கு ஒப்பந்தம் அல்லது முறி செய்து கொண்டிருக்கும் ஒருவரிடமிருந்து கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவும் அத்தகைய ஒப்பந்தத்தின் அல்லது முறியின் குறித்துரைக்கப்பட்ட காலம் 2006.10.01 ஆந் திகதிக்கு முடிவுற்று அந்த ஒப்பந்தத்தின் அல்லது முறியின் மற்றெல்லாக் கட்டுப்பாடுகளையும் முற்றாக நிறைவேற்றி இருந்தால் மட்டுமே அவ்வாறான விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.

(எ) இவ் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தகவல் பிழையானதெனை விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து அவருக்கு வழங்கப்பட்ட புலமைப்பரிசில் வாபஸ் பெறப்படும்.

(ஏ) **விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி**.- 2006, ஒற்றோபர் 16 ஆந் திகதி பி. ப. 4.00 மணிவரை விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(ஐ) அத்தினத்திற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை கீழே காணப்படும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும் :-

செயலாளர்,
உயர் கல்விப் பிரிவு,
இல. 18, வோட் பிளேஸ்,
கொழும்பு 7.

(ஒ) உரிய முறையில் அனுப்பப்படாத, வேறு வகைகளில் அனுப்பப்பட்ட ஏதாவதொரு வகையில் பூரணமற்ற அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

(ஓ) இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் முன்னறிவித்தல் எதுவுமின்றி புலமைப்பரிசில் வழங்கும் நாட்டின் விருப்பத்தின்படி வேறுபடுவதற்கு இடமுண்டு.

9. **நேர்முகப் பரீட்சை**.- தகுதிபெற்ற விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் கொழும்பில், குறிப்பிடப்பட்ட நேரத்திலும் குறிப்பிடப்பட்ட இடத்திலும் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். நேர்முகப்பரீட்சையின்போது தமது கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை மற்றும் தமது தகுதியை உறுதிப்படுத்தும் ஏனைய ஆவணச் சான்றிதழ்கள் என்பவற்றின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட பிரயாண அல்லது ஏனைய செலவுகளுக்கான பணம் எதுவும் செலுத்தப்படமாட்டாது.

10. **மருத்துவப் பரிசோதனை**.- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் விசேட மருத்துவ சபையினால் நடத்தப்படும் வைத்திய பரிசோதனையில் சித்தியடைய வேண்டும்.

11. **புலமைப்பரிசிலுக்கு பெயர் குறித்தல்**.- புலமைப்பரிசிலுக்காக இலங்கைக் குடியரசு அதிகாரிகளினால் பெயர் குறிக்கப்பட்ட அபேட்சகர்கள் எவரும் தமக்குப் புலமைப்பரிசில் வழங்கப்பட்டதாகக் கருதலாகாது. பெயர் குறித்தலை அங்கீகரிக்கும் பொறுப்பு முற்றும் முழுதாக புலமைப்பரிசில் வழங்கும் நாட்டின் அதிகாரிகளின் விருப்பத்தின்படி நடைபெறுவதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி ஒருவர் தாம் தேர்தெடுக்கப்பட்டதன் பின்னர் தமது பெயர் குறித்தலை நிராகரிக்குமிடத்து வேறெந்த புலமைப்பரிசில் அளிப்பு தொடர்பாகவும் எதிர்காலத்தில் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

12. **லீவு**.- புலமைப்பரிசில்களை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு லீவு வழங்கலானது தாபனக்கோவை ஏற்பாடுகளுக்கும் லீவிற்கும் விண்ணப்பிக்கையில் நடைமுறையில் இருக்கும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கும் உட்பட்டதாகும்.

13. **ஒப்பந்தம்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் புலமைப்பரிசிலுக்காக வெளியேறு முன்னர் இலங்கை அரசுடன் கீழ் காணப்படும் விடயங்கள் தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ள வேண்டும்:-

(அ) குறித்த கற்கை நெறியை நேர்மையாகவும் ஊக்கத்துடனும் பின்பற்றித் திருப்திகரமாக நிறைவு செய்வதற்கும்.

(ஆ) கற்கைநெறியைப் பூர்த்திசெய்ததன் பின் தேவைப்படின் இலங்கை அரசினால் குறிக்கப்படும் குறித்த ஒரு கால வரையறைக்கு இலங்கை அரசின் கீழ் சேவை புரிவதற்கும்.

(இ) தமது ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட நியதிகள் நிபந்தனைகள் என்பவற்றிற்கிணங்க செயற்படத் தவறும் சந்தர்ப்பத்தில் புலமைப்பரிசிலின் முழுப் பெறுமதியையும் (அதாவது முழு புலமைப்பரிசில் தொடர்பாகவும் இலங்கை அரசினதும் அளிப்பு அதிகாரிகளுக்கும் செலவிடநேர்ந்த சகல செலவுகளும் மற்றும் அரசாங்க சேவையாளர் எனில் இதற்கு மேலதிகமாக சம்பளம் கொடுப்பனவுகள் உட்பட ஏனைய கட்டணங்கள்) என்பவற்றை மீள செலுத்துவதற்கும் இலங்கை அரசிற்கு உறுதியளிக்க வேண்டும்.

14. விண்ணப்பதாரர் ஒருவர் தேர்தெடுப்பது தொடர்பாக ஏதாவதொரு வகையில் முறையற்று ஆதரவு தேடவோ செல்வாக்குப் பெறவோ முயற்சி செய்தால் அக் காரணங்களினால் அவர் தகுதியற்றவராவார்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

இல. 18, வோட் பிளேஸ்,
கொழும்பு 7.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

*பொதுநலவாய அமைப்புப் பட்டப்பின்படிப்புப் புலமைப்பரிசில்கள், ஐக்கிய இராச்சியம் - 2007*

| 10 ரூபா பெறுமதியான முத்திரை |
|---|

| இல. :-----. (அலுவலக உபயோகத்திற்கு) |
|---|

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :-----.
   (ஆ) முதலெழுத்துகளுக்குரிய பெயர்கள் :-----.

2. முகவரி :-----.
   தொலைபேசி இல. :-----.

3. பிறந்த திகதி :-
   ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

4. 2007.10.01 ஆந் திகதிக்கு வயது :-
   வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

5. நீர் இலங்கைப் பிரசையா ? :-----.

6. விவாகம் செய்தவரா? தனியாளா? தாரமிழந்தவரா? :-----.

7. கல்வி/ தொழில்/தொழில்நுட்பத் தகைமைகள் :-

| பரீட்சையின்/சான்றிதழின் பெயர் | வருடமும் மாதமும் | நிறுவனம் | பாடங்கள் | சித்தியின் தரம் |
|---|---|---|---|---|
| | | | | |

8. தற்போதைய தொழில் :-

| பதவி | நிறுவனம் | திணைக்களம் | முதல் நியமனத் திகதி |
|---|---|---|---|
| | | | |

9. நீர் அரசாங்க, பல்கலைக்கழக, கூட்டுத்தாபன ஊழியரெனில் :-
(அ) உமது நியமனம் நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா? :-----.
(ஆ) நிரந்தரமெனில் நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா? :-----.
(இ) நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்ட கடித இலக்கமும் திகதியும் வழங்கிய அதிகாரியும் :-----.

10. (i) கற்க விரும்பும் பாடநெறி கற்கைத்துறை :-----.
(ii) எந்த பாடநெறிக்காக அப்பாடநெறியை கற்க விரும்புகிறீர்? (பட்டப் பின் படிப்பு கலாநிதி) :-----.

11. இலங்கைக் குடியரசுடன் அரசாங்க உதவிபெறும் வேறு ஏதேனும் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை முறி ஏதுமிருப்பின் அவற்றிலிருந்து விலகும் திகதி :-----.

12. இதற்கு முன்னர் புலமைப்பரிசில் கல்விச் சுற்றுலா பயிற்சி என்பவற்றிற்காக வெளிநாடு சென்றிருப்பின் அது தொடர்பான முழு விபரங்கள் :-----.

13. ஆங்கிலத்தில் சித்தியடைந்துள்ள பரீட்சைகள் IELTS அல்லது TOFEL :-----.
புள்ளிகள் :-----. வருடம் :-----.

14. ஆராய்ச்சி ஆராய்ச்சி தொடர்பான வெளியீடுகள் இருப்பின் :-----.

15. வேறு ஏதேனும் விடயங்கள் :-----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவை எனயும் தேவையான எதுவித தகவல்களையும் மறைக்கவில்லையெனவும் உறுதியளிக்கின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் பிழையானவை என தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதனையும் தெரிவிற்குப் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால் எனது புலமைப்பரிசில் செல்லுபடியற்றதாகிவிடும் என்பதனையும் நான் அறிவேன்.

--------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

16. *விண்ணப்பதாரி அரசாங்க நிதியத்தினால் உதவிபெறும் நிறுவனம் ஒன்றின் ஊழியராயின் –*

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(i)(அ) இப்புலமைப்பரிசிலின்கீழ் அளிக்கப்படும் பயிற்சி இந்நிறுவனத்திற்கு அவசியமானது/ அவசியமற்றது ;

(ஆ) விண்ணப்பப்படிவத்தில் 8, 9, 11 ஆம் கூடுகளில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அலுவலரின் பிரத்தியேக கோவையுடன் ஒப்பிடப்பட்டு அவை சரியானவை என்றும்,

(இ) விண்ணப்பதாரி தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் என்றும் ................................................ ஆந் திகதி உறுதிப்படுத்தப் பட்டுள்ளாரென்றும்,

(ஈ) புலமைப்பரிசிலுக்குத் தேர்ந்தெடுக்கப்படுமிடத்து அவர் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார்/ விடுவிக்கப்படமாட்டார் என்றும்,

(உ) விண்ணப்பதாரிக்கு சம்பளத்துடனான லீவு/சம்பளமற்ற லீவு வழங்கப்படும்/வழங்கப்பட மாட்டாது எனவும் சான்றுபடுத்துகிறேன்.

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் திரு./திருமதி/செல்வி :................................................................

(iii) வேறு விடயங்கள் ஏதும் இருப்பின் ...............................................................

---------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோக முத்திரையுடன்)

நிறுவனத்தின் பெயர் :-----.

திகதி :-----.

(இச்சான்றிதழை நிறுவனத் தலைவர் பிரத்தியேகமாக கையொப்பமிட வேண்டும்.)

(தேவையற்ற சொற்களைக் கீறிவிடுக.)

9-674

திருத்தம்

## அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவையின் II ஆம் வகுப்பிலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை - 2006 (1)

*2006.08.18 ஆந் திகதிய 1,459 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட பரீட்சை அறிவித்தல் தொடர்பாக -*

*2. மேலே குறிப்பிடப்பட்ட பரீட்சை அறிவித்தல் பந்தி 5.0 இல் குறிப்பிடப்பட்ட விண்ணப்ப முடிவு திகதி 2006, ஒற்றோபர் 09 ஆந் திகதி என திருத்தப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*ஏ. நோபட்,*
*இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,*
*அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.*

*அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 7.*
*2006, செத்தெம்பர் 05.*

*9- 714*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.